3. அறிவிப்புகள்—(தொடர்ச்சி)

(ஆ) மதுரை காமராசர் பல்கலைக் கழகப் பேரவைக்கு
உறுப்பினர்கள் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மதுரை காமராசர் பல்கலைக் கழகப் பேரவைக்கு (செனட்) ஒன்பதாவது சட்டமன்றப் பேரவையின் சார்பில் நால்வரைத் தங்களிலிருந்து தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்யுமாறு, மதுரை காமராசர் பல்கலைக் கழகம் கோரியுள்ளது. தேர்ந்தெடுக்கப்படுபவர்களின் பதவிக் காலம் 16-8-1990 அன்று முடிவுறும்.

(இ) அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பேரவைக்கு
உறுப்பினர்கள் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் பேரவைக்கு (செனட்) ஒன்பதாவது சட்டமன்றப் பேரவையின் சார்பில் மூவரைத் தங்களிலிருந்து தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்யுமாறு, அண்ணாமலைப் பல்கலைக் கழகம் கோரியுள்ளது. தேர்ந்தெடுக்கப்படுபவர்களின் பதவிக் காலம் 5-12-1989 அன்று முடிவுறும்.

(ஈ) சென்னைப் பல்கலைக்கழகப் பேரவைக்கு
உறுப்பினர்கள் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சென்னைப் பல்கலைக்கழகப் பேரவைக்கு (செனட்) ஒன்பதாவது சட்டமன்றப் பேரவையின் சார்பில் அறுவரைத் தங்களிலிருந்து தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்யுமாறு, சென்னைப் பல்கலைக் கழகம் கோரியுள்ளது. தேர்ந்தெடுக்கப்படுபவர்களின் பதவிக்காலம், தேர்ந்தெடுக்கப் பட்ட நாளிலிருந்து மூன்றாண்டுகளாகும்.

(உ) தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகப் பேரவைக்கு
உறுப்பினர்கள் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தஞ்சாவூர் தமிழ்ப்பல்கலைக் கழகப் பேரவையில் (செனட்) ஏற்பட்டுள்ள இரண்டு வெற்றிடங் களுக்குத் தமிழ்நாடு சட்டப் பேரவை உறுப்பினர்கள் தங்களிலிருந்து இருவரைத் தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்யுமாறு, தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகம் கோரியுள்ளது. தேர்